
Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

02.05.2020 சனிக்கிழமை


The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY
PART I : SECTION (I) — GENERAL
Government Notifications
ORDER UNDER SECTION 10 (1) (a)
of the Holidays Act, No. 29 of 1971

# பெரும் சிக்கலில் வேட்பு மனுக்கள்!

கொழும்பு, மே 2

ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் சட்ட ரீதியான வலு தொடர்பில் கேள்வி எழுந்துள்ளது. இதன் காரணமாக ஜூன் 20 ஆம் திகதி பெரும்பாலும் தேர்தல் நடக்காது என்று தெரிவிக்கப்படுகின்றது. 2

**ஜூன் 20 தேர்தல் நடக்காது**



## தேர்தலை நடத்துவதானால் சட்டங்களில் திருத்தம் தேவை

*தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தெரிவிப்பு*

கொழும்பு, மே 2

தற்போதுள்ள நிலைமை சீராகுவதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகலாம் என்று கூறுகின்றார்கள். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலை இனி நடத்துவதானால் தேர்தல் சட்டங்களில் 2

## 172 பேர் குணமடைவு
## 511 பேர் சிகிச்சையில்

### 179 பேருக்கு கொரோனா தொற்று சந்தேகம்

கொழும்பு, ஏப்.2

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 10 பேர் குணமடைந்துள்ளனர். சுகாதார அமைச்சின் கணக்கெடுப்பின்படி கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 162 இலிருந்து 172 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 24 மணித்தியாலங்களில் 2



## 275 கடற்படையினருக்கு கொரோனாத் தொற்று!

### அவர்களின் 21 உறவினர்களும் பாதிப்பு

கொழும்பு, மே 2

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த 275 படையினரும், அவர்களின் 21 உறவினர்களுமாக 296 பேர் கொரோனா வைரஸால் நேற்று வரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் 2

## மஹிந்தவின் அழைப்பை ஏற்றது ரணில் அணி!

கொழும்பு, மே 2

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்ளும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடு 2

## வவு. கடற்படைச் சிப்பாயின் குடும்பத்துக்கு தொற்றில்லை

வவுனியா, மே 2

வவுனியா மாகாகச்சகொடி பகுதியைச் சேர்ந்த கடற்படை சிப்பாயின் குடும்பத்தினர் 8 பேருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று வவுனியா பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மகேந்தி 2

## குணமடைந்த நோயாளிக்கு மீண்டும் கொரோனா!!!

### இலங்கையில் புதிய சிக்கல்

கொழும்பு, மே 2

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பியிருந்த ஜாஎல பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இதனை சுகாதார சேவை 2



## புதுக்குடியிருப்பில் வெடிபொருள் மீட்பு

முல்லைத்தீவு, மே 2

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட ஒரு தொகுதி வெடிபொருள்கள் இன்று மீட்கப்பட்டன. புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள சுனாமி நினைவாலயத் 2

## கொரோனா இல்லை சாத்திரம் சொன்ன சவேந்திர சில்வா!

கொழும்பு, மே 2

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் திடீர் சுகவீனமுற்று நேற்று உயிரிழந்த வயோதிபர்கள் இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது மருத்துவ பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது. இவ்வாறு கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத் 2

## குடத்தனைச் சம்பவம் சட்ட உதவிக்கு தயார்

*மணிவண்ணன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 2

குடத்தனையில் பொதுமக்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சட்ட உதவிகளை வழங்குவதற்குத் தயாராக உள்ளதாக 2

## சிக்குண்டவர்கள் சொந்த இடங்களுக்கு!

கொழும்பு, மே 2

கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால், தமது இருப்பிடங்களுக்கு செல்ல முடியாமல் மேல் மாகாணத்தில் சிக்கியுள்ளவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் வழிநடத்தலில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல்கட்டமாக 320 பேர் வரை அனுப்பப்பட்டுள்ளனர். (ஓ,5)

## புதுக்குடியிருப்பில் வெடிபொருள்...

துக்கு முன்னால் உள்ள வீதியோரத்தில் போர் நடைபெற்ற காலத்தில் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் இடம் ஒன்று பொலிஸாரால் இன்று அகழப்பட்டது.
புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் குறித்த பகுதி இன்று காலை சிறப்பு அதிரடிப்படையினரால் 'பைக்கோ' இயந்திரம்கொண்டு அகழப்பட்டது. இதன்போதே மூன்று ஆர்.பி.ஜி. எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.
மீட்கப்பட்ட வெடிபொருள்கள் சிறப்பு அதிரடிப்படையினரால் தகர்த்து அழிக்கப்படவுள்ளன என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-19)

## பெரும் சிக்கலில்...

தேர்தல்கள் ஆணைக்குழுவினருக்கும், அரசியல் கட்சிகளின் செயலர்களுக்கும் இடையில் தேர்தல்கள் செயலகத்தில் இன்று காலை கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.
இப்போது நாடாளுமன்றத் தேர்தல் நடத்த வேண்டாம் என்று இன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மற்றும் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான கட்சி ஆகியன மாத்திரமே தேர்தல் பிற்போடப்படுவதை எதிர்த்தன. திகதி அறிவிக்கப்படாமல் தேர்தல் ஒத்தி வைக்கப்பட வேண்டும் என்று ஏனைய கட்சிகள் வலியுறுத்தின.
மேலும் நாளை மறுதினம் 4ஆம் திகதி வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் வழங்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும் தற்போது அது வழங்கப்படாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் அறிவித்தார்.

**வேட்பு மனு விவகாரம்**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை மார்ச் மாதம் 12ஆம் திகதியிலிருந்து 19ஆம் திகதி வரை தாக்கல் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கொரோனாத் தாக்கம் காரணமாக மார்ச் மாதம் 16ஆம் திகதி விடுமுறை என்று அரசு அறிவித்திருந்தது. அன்றைய தினம் வேட்புமனுத் தாக்கல் இடம்பெறாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவும் அறிவித்திருந்தது. மார்ச் 17ஆம், 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் வேட்புமனுத் தாக்கல் இடம்பெற்றது. இந்தத் திகதிகளிலேயே நாடு முழுவதும் முக்கிய அரசியல் கட்சிகள் எல்லாம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.
ஆனால் இந்த மூன்று திகதிகளும் விசேட பொதுவிடுமுறையாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் மார்ச் 17ஆம் திகதியிடப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தற்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் தெரியவந்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.
விடுமுறை அறிவிக்கப்பட்ட நாள்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களின் வலுத் தொடர்பில் சட்டரீதியான சிக்கல் எழுந்துள்ளது. இந்த மூன்று நாள்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீண்டும் தாக்கல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும், இதன் காரணமாக ஜூலை 20ஆம் திகதி தேர்தல் நடத்தப்படாது என்றும் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஒ,5,105)

## தேர்தலை நடத்துவதானால்...

மாற்றம் செய்யப்பட வேண்டும். தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக தேர்தலை நடத்த முடியாது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
தேர்தல்கள் ஆணைக்குழுவினருக்கும், அரசியல் கட்சிகளின் செயலர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது: "தற்போதுள்ள நடைமுறையில் தேர்தலை நடத்த முடியாது. பல்வேறு நடைமுறை மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதனைச் செய்வதற்கு தேர்தல் சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தெரிவித்தார்.
ஏற்கனவே அரசமைப்பு ரீதியான சிக்கல்கள் இருக்கின்றது. இப்போது நீங்கள் (மஹிந்த) புதுப் பிரச்சினைகளைச் சொல்லியுள்ளீர்கள். சட்டங்களைத் திருத்த வேண்டும் என்று சொல்லியுள்ளீர்கள். அப்படியானால் அரசமைப்பின் 33 ஆவது பிரிவுக்கு அமைவாக உங்களுக்கு தரப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தேர்தல் சட்டங்களைத் திருத்த வேண்டும் என்று ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுங்கள் என்று நான் தெரிவித்தேன். நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு நாங்கள் சொல்ல முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட, நாடாளுமன்றத்தை கூட்டுமாறு நீங்கள் சொல்ல முடியாதுதான். ஆனால், சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஆலோசனையை ஜனாதிபதிக்கு முன்வைக்க அதிகாரம் உள்ளது. அதனைத்தான் சுட்டிக்காட்டுகின்றேன் என்று குறிப்பிட்டேன். என்றார். (ஒ,5)

## மஹிந்தவின் அழைப்பை...

வதற்காக எட்டாவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அனைத்து உறுப்பினர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி அலரிமாளிகைக்கு வருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.
எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் அணி மற்றும் ஜே.வி.பி. ஆகியன அழைப்பை நிராகரித்தன. சந்திப்பில் கலந்து கொள்ளப்போவதில்லை எனவும் திட்டவட்டமாக அறிவித்துள்ளன.
இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் அணியின் நிலைப்பாடு என்னவென வினவியபோதே அகிலவிராஜ் காரியவசம் மேற்படி தகவலை வெளியிட்டார்.
'கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை சிறந்த முறையில் முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காகவும், தேவையான சட்ட, திட்டங்களை இயற்றுவதற்காகவும் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஐக்கிய தேசியக்கட்சி உட்பட எதிரணிகள் கோரிக்கை விடுத்திருந்தன. இதற்கு அரசதரப்பிடம் இருந்து இன்னும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. இவ்விடயத்தை மீண்டும் வலியுறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். அதற்கான ஓர் வாய்ப்பாக 4 ஆம் திகதி கூட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும் என நம்புகின்றோம். கூட்டத்தில் பங்கேற்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ள நிலையில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஒன்று கூடி, அடுத்த கட்டம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர்' - என்றார். (ஒ,5,44)

## 172 பேர் குணமடைவு

15 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையிலிருந்து 7 பேரும், வெலிகந்தை ஆதார வைத்தியசாலையிலிருந்து 07 பேரும், இரணவில வைத்தியசாலையிலிருந்து ஒருவரும் குணமடைந்துள்ளனர். அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 690 பேரில் தற்போது 511 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
வெலிசறை கடற்படை முகாமில் அமைந்துள்ள வைத்தியசாலையில் 140 பேரும், கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் 133 பேரும், கொழும்பு கிழக்கு முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் 78 பேரும், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் 59 பேரும், பொலனறுவை வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் 51 பேரும், ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் 33 பேரும், இரணவில வைத்தியசாலையில் 17 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதே வேளை, மேலும் 179 பேர் 30 வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ22)

## 275....

ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
275 கடற்படையினரில் 217 பேர் வெலிசறை கடற்படை முகாமுக்குள் இருந்தும், 58 பேர் விடுமுறையில் வீடு சென்றிருந்த நிலையிலும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்ட 25 நோயாளர்களில் 18 பேர் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் எனவும், ஏனைய 7 பேரில் 6 பேர் கடற்படையினரின் உறவினர்கள் எனவும் அவர் கூறினார். கடற்படையினரின் உறவினர்களான 6 பேரில் 4 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். கிளிநொச்சி, முழங்காவிலில் உள்ள கடற்படை தனிமைப் படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த போதைப் பழக்கத்துக்கு அடிமையான ஒருவரும் நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் அடங்குகின்றார் எனவும் அவர் மேலும் கூறினார். (ஒ,5,22)

## வவு. கடற்படைச்....

ரன் தெரிவித்தார். வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த கடற்படை சிப்பாய்க்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.
வவுனியா மகாகச்சகொடியை சேர்ந்த சிப்பாயின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர்கள் என்று 9 பேர் பம்பைமடு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.
அவர்களது மாதிரிகள் எடுக்கப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அவர்களில் 8 பேரின் முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தொற்று அவர்களுக்கு இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒருவரின் பரிசோதனை முடிவு இதுவரை கிடைக்க வில்லை என்று குறிப்பிட்டார். (ஒ,5,110)

## குணமடைந்த....

கள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க உறுதிப்படுத்தினார்.
நெஞ்சு வலியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நோயாளிக்கு மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது என ஜாஎல பொது சுகாதார பரிசோதகர் கே.ஏ. அனுர அபேரத்ன தெரிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் அனைவரையும் அச்சமடையச் செய்துள்ளது. 67 வயதான நோயாளி கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி முதன் முதலில் கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் ஏப்ரல் 17ஆம் திகதி முழுமையாகக் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியிருந்தார். இதன் பின்னர் கடந்த 30ஆம் திகதி மீண்டும் நெஞ்சு வலி ஏற்பட்டபோது அவர் வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்தார். அதனைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் கொரோனா வைரஸ் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறித்த நோயாளி தற்போது கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ஒ,5,22)

## கொரோனா இல்லை....

தின் தலைவரான இராணுவத் தளபதி லெப்டினன்ட் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
இதேவேளை உயிரிழந்த முதியவர்களில் ஒருவரது மாதிரிகள் நேற்றுக்காலை பெறப்பட்டு பரிசோதிக்கப்பட்டு அவருக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.
ஆனால் மற்றைய முதியவரின் மாதிரிகள் நேற்றுக் காலையே எடுக்கப்பட்டன. சோதனை முடிவு இன்றுமாலை வரை வெளியிடப்படவில்லை.
ஆனால் இராணுவத் தளபதி இன்று காலை ஊடகச் செய்தியில், இருவருக்கும் தொற்று இல்லை எனத் தெரிவித்துள்ளார்.
'இருவரும் பல்வேறு நோய்களால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தவர்கள். மருத்துவ பரிசோதனையில் இருவரும் முதுமையின் காரணமாக பொதுவான நோய்களால் இறந்துள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது' எனவும் அவர் மேலும் கூறினார். பரிசோதனை முடிவுகள் வரமுன்னரே சவேந்திர சில்வா சொன்ன 'சாத்திரம்' குறித்து பல்வேறு சந்தேகங்கள் மக்களிடம் எழுந்துள்ளன. (ஒ,5,22)

# தவறைத் திருத்திக்கொண்டு கொரோனாவை ஒழிப்போம்

## கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, மே 2

குறைகள் மற்றும் தவறுகளை கருத்தில் கொண்டு கொரோனா ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகொள்ள வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொரோனா ஒழிப்புச் செயலணி யுடன் நடத்திய கலந்துரையாட லிலேயே ஜனாதிபதி மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். அரச வைரஸை ஒழிப்பதற்கு மேற் கொண்ட நடவடிக்கைகள் உல கின் அனைத்து நாடுகளைப் பார்க்கி லும் முன்னிற்பதாக தொற்றுநோய் தொடர்பில் உலகின் முன்னணி வைத்திய நிபுணர்களில் ஒருவ ரான ஹொங்கொங்கில் உள்ள பேராசிரியர் மலிக் பீரிஸ் சுட்டிக் காட்டியுள்ளார் என்று வைத்தியர் கள் இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டனர்.

அதற்கு பங்களித்த சுகாதார, பாதுகாப்பு துறை உள்ளிட்ட



ஏனைய அனைவரையும் பாராட் டிய ஜனாதிபதி அவர்கள் இந்த நிலைமையை தொடர்ந்தும் பாதுகாத்து பேண வேண்டும் என்றும் குறிப்பிட்டார். வைரஸை ஒழிப்பதில் மக்கள் குழுக்களாக வாழும் பிரதேசங்கள் மற்றும் விசேட பிரிவினர் தொடர்பில் பொது முறைமையில் இருந்து விலகி திட்டமிடுவதன் அவசியத் தையும் ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார்.

சந்தையில் விற்பனைக்குள்ள கிருமித் தொற்றகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களின் நியமங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்து மாறும் வைத்தியர்கள் கேட்டுக் கொண்டனர். நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு செய்யும் சுகாதார மற்றும் பாது காப்பு துறையினர் பயன்படுத்தும் விசேட ஆடைத் தொகுதியின் நியமங்கள் குறித்தும் ஆராயுமாறு ஜனாதிபதி அவர்கள் குறிப் பிட்டார்.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, பிரத மரின் செயலாளர் காமினி செனரத், பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன, சுகாதார அமைச்சின் செயலாளர் பத்ரானி ஜயவர்த்தன, பாதுகாப்பு பணிக் குழாம் பிரதானி, முப்படைகளின் தளபதிகள், பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் விசேட மருத்து வர்கள் உள்ளிட்ட கொரோனா ஒழிப்பு செயலணியின் உறுப்பி னர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். (எ)

# 29 மாணவர்களுக்கு கிளிநொச்சியில் 9 ஏ

கிளிநொச்சி, மே 2

அண்மையில் வெளியிடப்பட்ட சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 27 மாண வர்கள் 9 ஏ தரத்தில் சித்தியடைந் துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் கடந்த திங்கட் கிழமை வெளியிடப்பட்டன. அதில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 27 மாணவர்கள் 9 ஏ தர சித்திகளையும், 21 மாணவர்கள் 8 ஏ, பி சித்திகளை யும், 7 பேர் 8 ஏ, சி சித்தி களையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 8 மாணவர்கள் 9 ஏ சித்திகளையும், 9 மாணவர்கள் 8 ஏ, பி சித்திகளையும், ஒரு வர் 8 ஏ, சி சித்தியையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியா லயத்தில் தலா 4 மாணவர்களும், பளை மத்திய கல்லூரியில் 3 மாண வர்களும், முரசுமோட்டை முருகா னந்தா கல்லூரியில் 2 மாணவர்க ளும், கனகபுரம் மகா வித்தியாலயம், கண்டாவளை மகா வித்தியாலயம், பூநகரி நல்லூர் மகா வித்தியால யம், சென்திரேசா மகளிர் கல்லூரி, விவேகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒரு மாணவர் வீதம் 9 ஏ சித்திகளையும் பெற்றுள்ள னர். தர்மபுரம் கல்லூரியில் 3 மாண வர்கள் 8ஏ பி சித்திகளையும் பெற் றுள்ளனர். (க-6)

# டொலரின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, மே 2

அமெரிக்க டொலரின் பெறு மதி அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறி வித்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி195 ரூபா 8 சதமாக காணப்படுகின்றது.(ஐ)

# 1000 கிலோப் பூசணியை விற்க முடியாது தவித்தவருக்கு உதவி

கிளிநொச்சி, மே 2

பூசணிக் காய்களை உற்பத்தி செய்தும் விற்பனை செய்ய முடியாமல் தவித்த கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியன்குளம் பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்து வக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு "நாம் எமக்காக நாமாவோம்" என்ற அமைப்பு உதவி புரிந்துள்ளது.

அவருடைய தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயி ரக்கணக்கான கிலோ நிறை யுடைய பூசணிக்காய்களில் 950 கிலோ பூசணிக்காய்களை அந்த அமைப்புக் கொள்வனவு செய்துள்ளது. கொரோனா அவசர காலநிலையால் தனது உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாத நிலையில் தவித்த அந்தப் பெண் தொடர்பில் நலன்விரும்பிகள் முகநூலில் பதிவிட்டிருந்தனர். அதை யடுத்து அந்த அமைப்பு அவரி டமிருந்து 950 கிலோ நிறையு டைய பூசணிக்காய்களைக் கொள்வனவு செய்தது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பூசணிக்காய்கள் கிளி மக்கள் அமைப்பு ஊடாக கிளிநொச்சி மற்றும், மீள்குடியேற்றப் பகுதிகளான வசந்தபுரம், மணியம் தோட் டம், ஹெலன் தோட்டம், மகேந்திரபுரம், ஈச்சமோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளது. இந்த மனித நேயமிக்க செயற்பாட்டுக்கு கணநாதன் மற்றும் விமல் ஆகியோர் நிதியுதவி வழங்கி யுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ப-222)

# தேர்தல் அறிவிப்பு சட்ட விரோதமானது

## உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, மே 2

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு ஜூன் 20ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட் டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சரித்தா மைத்ரி குணரத்ன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதியின் செயலாளர், சட்ட மா அதிபர், சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணையாளரால் கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்ட தேர்த லுக்கான வர்த்தமானி அரசமைப்புக்கு முரணானது என்பதால் அதை இரத்துச் செய்ய வேண்டும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 3 மாத காலத்துக்குள் தேர்தல் நடத்தாது விடுக்கப்பட்டுள்ள இந்தத் தேர்தல் புரிய அறிவிப்பும் சட்ட விரோதமானது என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (எ)



# மங்கள சமரவீர மீது மஹிந்தானந்த சாடல்

கொழும்பு, மே 2

முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் மங்கள சமரவீர, அரச அதிகாரிகளையும் நாட்டையும் தவறாக வழி நடத்தியுள்ளார் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டி யுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை அரசியல் அமைப்பு ஊடாக தீர்ப்பதற்கும், அரச செலவுகளுக்கான அங்கீகா ரத்தை வழங்கவும் நாடாளுமன் றம் மீண்டும் கூட்டப்பட வேண் டும் என கோரி மங்கள சமரவீர, ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி யுள்ளார். தற்போது அரசாங்க பணியாளர்களுக்கான வேதனம் வழங்குவது உள்ளிட்ட அத்தியா வசிய செலவுகளுக்கு சட்ட ரீதியாகவும், அரசியலமைப்பு ரீதியாகவும் அங்கீகாரம் வழங்கு வதற்கு நாடாளுமன்றம் கூட்டப் பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தல் விடுத்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் நாவலப்பிட்டியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்ததாவது

அரசமைப்பில் ஜனாதிபதியின் நிதி அதிகாரங்கள் தொடர்பில் தெளிவாக விளக்கமளிக்கப்பட் டுள்ளது. அவ்வாறான தெளி வான விளக்கம் வழங்கப்பட் டுள்ள நிலையில், மங்கள சமரவீர போன்றோர் நாட்டையும், அரச அதிகாரிகளையும் தவறாக வழி நடத்த முயல்கின்றனர். அவர் போன்றோர் கைது செய் யப்பட வேண்டும்- என்றார்.(க)

# சலூன்களைத்திறக்க அனுமதி தாருங்கள்

## மன்னார் சி. தொ.கூ. சங்கத்தினர் கோரிக்கை

மன்னார், மே 2

மன்னார் மாவட்டத்திலுள்ள சிகை யலங்கரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்க அனுமதிக்குமாறு கோரி, மன்னார் பிரதேச சிகைய லங்கார தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரால் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன் றாஸிடம் கோரிக்கைக் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ள தாவது:

மன்னார் பிரதேச சிகை அலங்காரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் ஆகிய நாம் எமது பணிவான வேண்டுகோளினை தங்களின் மேலான கவனத்திற்கு முன்வைக்கின்றோம். நாட்டில் ஏற்பட்டுள்ள 'கொரோனா' நோய் தொடர்பான சுகாதார செயற்பாடுகளுக்கு நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் எமது முழுமையான ஆதரவினையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேற்படி தொற்று நோய் பரவலை தடுப்பதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் செயற்பாடுகளில் ஒன்றான 'சிகை அலங்கரிப்பு நிலையங்களை' மூடுகின்ற செயற்பாட்டால் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், அவர்களை நம்பி வாழ்கின்ற குடும்பத்தினரும் பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான ஊடரங்குகள் சட்டத்தின் காரணமாக மிகவும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளோம்.

அரசின் தற்போதைய அறிவிப்பால் மிகவும் இக்கட்டான சூழ் நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலையில் கடந்த 22 ஆம் திகதியன்று மன்னார் மாவட்ட சுகாதார பணிமனையில் எமது சங்க உறுப்பினர்களுக்கு என இரண்டு பிரிவாக இடம் பெற்ற விசேட கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி , மன்னார் நகர சபை செயலாளர், மன்னார் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் போது 'மல்டி மீடியா' மூலமான செய்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது. சிகை அலங்கரிப்பு நிலையம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான கையேடு வழங்கப்பட்டது. நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான பொலிஸ் ஊரடங்குச் சட்டம் காரணமாக சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் சிறுவர்கள் , முதியவர்கள், அலுவலகப் பணியாளர்கள் என பல்வேறு நிலையில் உள்ளோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டும் எமது மாவட்ட மக்களிடம் இந்த நிலையை நிவர்த்தி செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நாம் சிகை அலங்கரிப்பு நிலையங்களை தொடர்ந்தும் தங்களது அறிவித்தலின் படி இயங்க ஆவணம் செய்யுமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ப-56)



# உழவு இயந்திரம் கையளிப்பு

முல்லைத்தீவு, மே 2

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் போரால் பாதிக்கப்பட்ட இரு குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு உழவு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

23 லட்சத்து 89ஆயிரம் ரூபா பெறுமதியான கலப்பையுடனான உழவு இயந்திரத்தைப் புலம்பெயர்ந்து வாழும் கொடையாளர்கள் வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவைப் பூர்வீகமாகக் கொண்டு தற்போது பிரான்ஸில் வசித்துவருபவர்களான இராசரத்தினம் றஞ்சன், தாமோதரம்பிள்ளை வரதன், குமாரசாமி மனோகரன் ஆகிய மூவரும் இணைந்து குறித்த உழவு இயந்திரத்தை வழங்கினர். 'பாலிநகர் பாண்டியன் உறவுகள்' அமைப்பின் ஏற்பாட்டில் உழவு இயந்திரம் வழங்கப்பட்டது.

இந்த உழவு இயந்திரம் மூலமாக வருமானம் ஈட்டிக்கொள்ளும் அதேவேளை, மேலதிகமான வருமானத்தைக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் நோக்கில் இது வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந)

# கற்பாறைக்கு வெடி வைத்தவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 2

பொலனறுவையில் கற்களை உடைப்பதற்காக வைக்கப்பட்ட வெடியில் அகப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். பொலனறுவை, கலஹகல பிரதேசத்தில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கல் அகழும் இடத்தில் கருங்கற்களை உடைப்பதற்காக அந்த நபர் கல் வெடி வைத்துக் கொண்டிருந்துள்ளார். அது வெடித்ததில் அதில் அகப்பட்டு குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த 60 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக பொலனறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-22)



# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 2

உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் 4 ஆயிரத்து 750 மில்லிமீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-111)

# வீடுகளில் இருந்தவாறே வெசாக்கை கொண்டாடுக

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 2



நாட்டில் கொவிட் 19 வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் இம்முறை வெசாக் உற்சவ வழிபாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சு தொடர்ந்து மக்களுக்கு அறிவுறுத்தல்களை வெளியிட்டு வருகின்றது.

அதன்படி, விகாரைகளுக்குச் சென்று வழிபடும் போது தனி மனித இடைவெளிகளைக் கடைபிடிப்பது கடினம் என்பதால் இயன்றளவு வீடுகளிலேயே வழிபாட்டு நிகழ்வுகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்து சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. வெசாக் உற்சவம் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளும் பொருத்தமான சுகாதார பரிந்துரைகளுக்கு ஏற்ப பின்பற்றப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# மரக்கறி மற்றும் கடலுணவை நிலத்தில் வைத்து விற்கத் தடை

## சுகாதாரப் பிரிவு அறிவிப்பு

சாவகச்சேரி, மே 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதியோரங்களில் மரக்கறி மற்றும் கடலுணவுகள் விற்பனை செய்வோர் அவற்றை நிலத்தில் வைக்காமல் உயரமான பெட்டிகளில் வைத்து விற்பனை செய்யுமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள சந்தைகள் கடந்த மார்ச் 24ஆம் திகதி மூடப்பட்டதால், வட்டாரங்களில் உள்ளூராட்சி சபைகளால் அறிவிக்கப்பட்ட இடங்களில் செயற்பட்டு வருகின்றன.

கொட்டகைகளிலும், கொட்டகை இல்லாத இடங்களிலும் மரக்கறி மற்றும் கடலுணவுகள் போன்றவற்றை நிலத்தில்



விரிப்புகளை விரித்து விற்பனை செய்வதை அவதானிக்க முடிந்தது. தற்காலிகச் சந்தை இயங்கும் இடங்கள் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதால், அவற்றை வாங்கும் மக்களுக்குத் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்புக் காணப்படுகிறது.

கொட்டகையின்றிக் காணப்படும் இடங்களில் மரக்கறி மற்றும் கடலுணவுகள் போன்றவை தொடர்ச்சியாக வெயிலில் காணப்படுவதால் பழுதடையும் நிலையும் காணப்படுகிறது.

சந்தைகள் மீண்டும் இயங்கும் வரை வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் மரக்கறிகள் மற்றும் கடலுணவுகளை வெயில் படாதவாறு வைப்பதுடன், அவற்றை நிலத்தில் வைக்காமல் உயரமான பெட்டிகளில் வைத்து விற்குமாறும், அதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்கள் தொடர்ந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் சுகாதாரப்பிரிவினர் அறிவித்துள்ளனர். (க-9)

# கைக்குண்டு மீட்பு

கொழும்பு, மே 2

புத்தளம் சேகுவந்தீவு பகுதியில் தனியாருக்கு சொந்தமான உப்பு வாய்க்காலில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

உப்பு வாய்க்காலின் உரிமையாளர் புத்தளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், புத்தளம் நீதிமன்றத்தின் உத்தரவின்படி புத்தளம் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருக்கு தகவலை வழங்கியுள்ளனர். அதையடுத்து பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் கைக்குண்டை மீட்டு பாதுகாப்பான முறையில் வெடிக்கச்செய்துள்ளனர். 82 ரக கைக்குண்டு ஒன்றே மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (எ)

# மே தினத்தில் நெடுந்தீவில் அனைத்துலக பல்துறை இணைப்பகத்தின் சேவை

யாழ்ப்பாணம், மே 2

தொழிலாளர் தினமான நேற்று நெடுந்தீவு மக்கள் அனைத்துலக பல்துறை இணைப்பகத்தின் சேவைகள் உணர்வுபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக நெடுந்தீவு வாழ் மக்கள் அனைவருக்கும் முகக் கவசம் (மாக்ஸ்) வழங்கும் வகையில், நெடுந்தீவு மக்கள் அனைத்துலக பல்துறை இணைப்பகத்தின் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புலம்பெயர் உறவுகளின் நிதியில் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோகுலதாஸன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நெடுந்தீவு மக்கள் முகக்கவசத்தைப் பெற்றுக் கொள்வதில் இருக்கும் இடர்பாடுகள் தொடர்பில் நெடுந்தீவு சுகாதாரப் பிரிவால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து நெடுந்தீவு மக்கள் அனைவருக்கும் முகக் கவசத்தை வழங்குவதற்கு நெடுந்தீவு மக்கள் அனைத்துலகப் பல்துறை இணைப்பகம் முடிவு செய்திருந்தது. அதன் ஒரு கட்டமாக நேற்று அந்தச் செயற்றிட்டம் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நெடுந்தீவு கிராமிய வைத்தியசாலை, பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸ் நிலையம் என்பவற்றில் கடமையாற்றுவோருக்கான முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.

இந்த முகக் கவசங்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பரிந்துரைக்கமைய நெடுந்தீவு கடற்படையினரின் காமன்ஸ் ஊடாக நெடுந்தீவு பெண்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாகவும் அனைத்து நெடுந்தீவு வாழ் மக்களுக்கும் குறித்த முகக் கவசங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# ஊரடங்கால் வீணாகும் மர முந்திரிகை செய்கை

*சந்தை வாய்ப்பை ஏற்படுத்துமாறு கோரிக்கை*

கிளிநொச்சி, மே 2



தொடர் ஊரடங்கு காரணமாக மர முந்திரிகை செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். செய்கை பண்ணப்பட்ட மரமுந்திரிகைகள் விற்பனை செய்ய முடியாது வீணாகிப்போகின்றன. இதற்கு சம்மந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் மர முந்திரிகைச் செய்கையில் பல குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

செய்கையாளர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நாம் கடந்த முறை நல்ல விளைச்சலை பெற்றுக் கொண்டோம். இந்த முறை இலைகளை வெட்டிய பின்னர் வருகின்ற குருத்தானது சுருண்ட வடிவில் வருகின்றது. இதனால் அங்கு உற்பத்தி ஆகின்ற பூக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. போதிய உரம் இன்மையா அல்லது நோய்த் தாக்கமா என அறியமுடியவில்லை இது தொடர்பாக உரியவர்களுக்கு தெரியப்படுத்தபட்டுள்ளது. அவர்கள் வருவதாக தெரிவித்துள்ளனர். பழங்கள் விற்பனை செய்வதற்கான போதிய சந்தை வசதி இல்லை. நாங்கள் தற்போது பழங்களை அறுவடை செய்யக்கூடிய நிலையில் உள்ளோம். ஆனால் தொடர்சியான ஊடரங்கு காரணமாக சந்தைக்குப் பழங்களை வழங்க முடியாத நிலையில் உள்ளோம். செய்கையாளர்கள் ஒவ்வொருவரும் உற்பத்தி செய்த தலா சுமார் 150 கிலோ பழங்கள் விற்பனை செய்ய முடியாத நிலையில் வீணாகியுள்ளன. இவை தொடர்பாக கவனம் எடுத்து சரியான சந்தை வாய்ப்புக்களை எமக்கு பெற்றுத்தர வேண்டும்- என்றார். (ப-6)



# மின்னல் தாக்கி ஒருவர் சாவு

கிண்ணியா, மே 2

கிண்ணியா கண்டல் காடு கிராமத்தில், மாடு மேய்த்துக்கொண்டிருந்த குடும்பத் தலைவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கிண்ணியா காக்காமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான முகம்மது பாருக் என்பவரே உயிரிழந்துள்ளார். சடலம் கிண்ணியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மணல் அனுமதிக்கு விசேட நடைமுறை

கொழும்பு, மே 2

மணல், மண் மற்றும் சரளைகளை ஏற்றிச் செல்வதற்கான அனுமதி வழங்கல் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் எளிமைப்படுத்தப்பட்ட நடைமுறையுடன் மேற்கொள்ளப்படும் என்று புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் 12 ஆம் திகதியன்று வெளியான சுற்றறிக்கையின் கீழ், இதற்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பதாரிகள் தனிமனித இடைவெளியைப் பேணுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு விதிமுறைகளின் கீழ் பணியகத்துக்கு வாடிக்கையாளர்களின் வருகையை மட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணியகத்தின் கனிம உரிமைகள் பணிப்பாளர் அல்லது தொடர்புடைய பிராந்திய அகழ்வாராய்ச்சிப் பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (க)

# தனிமைப்படுத்தலில் இறந்தோரின் சடலங்களால் எழுந்தது பிரச்சினை

முல்லைத்தீவு, மே 2

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இருந்து இரு வயோதிபர்கள் உயிரிழந்த நிலையில் அவர்களின் சடலங்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

அவர்களில் ஒருவருக்கு கொரோனா என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்களைப் பொறுப்பெடுப்பது யார் என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

கொழும்பு, பேருவளை பகுதியில் யாசகம் எடுத்து வந்த பலர் கடந்த மாதம் நடுப்பகுதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் இவ்வாறானவர்கள் 60 பேர் வரை கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள். இந் நிலையில் இவர்களில் இருவர் நேற்று உயிரிழந்தனர். நெஞ்சுவலி ஏற்பட்டுள்ள நிலையில் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது அவர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கொழும்பைச் சேர்ந்த 80 வயதுடைய வேலு சின்னத்தம்பி, அதே இடத்தைச் சேர்ந்த 81 வயதுடைய பி.ஜி.மார்டீன் என்பவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்களது சடலங்கள் மாவட்ட மருத்துவமனையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இருவரின் மாதிரிகள் கொரோனா வைரஸ் (பி.சி.ஆர்) பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ள போதும் வேலு சின்னத்தம்பி என்பவருக்கு கொரோனா தொற்று இல்லை என முடிவுகள் கிடைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இருவரும் கொழும்பில் யாசகம் பெற்று வந்தவர்கள் என்றும் இருவரின் சடலங்களை யார் பொறுப்பெடுப்பது இறுதி சடங்குகள் யார் செய்வது என்ற சிக்கல் நிலை தற்போது தோன்றியுள்ளது. முள்ளியவளை பொலிஸார் உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-19)



# கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

வவுனியா, மே 2

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

செட்டிகுளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 54 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா, 3 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் ஆகியவற்றையும் மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வீரபுரத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)

# சிப்பாயின் குடும்பத்தவரின் மீது கொரோனா பயத்தால் தாக்குதல்

## சந்தேகநபர்கள் விரைவில் கைதாவர் என்கின்றனர் பொலிஸார்

கொழும்பு, மே 2

குருணாகல் வாரியபொல, நேட்டிய பகுதியில் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் தந்தை, சகோதரன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நூற்றுக் கணக்கான கடற்படையினர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். கொரோனா தொற்றாளர்களை மறைத்து வைத்திருந்தனர் என்று தெரிவித்தே இவர்கள் கடற்படைச் சிப்பாயின் தந்தை மற்றும் சகோதரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்படை முகாம் ஒன்றில் கடமையாற்றும் இந்தக் கடற்படைச் சிப்பாய் கடந்த 11ஆம் திகதி விடுமுறையில் வீடு சென்றுள்ளார். கடந்த 21ஆம் திகதி அவர் கடமைக்குத் திரும்பியுள்ளார்.

அந்தக் கடற்படைச் சிப்பாயின் குழந்தைக்கு அதன்பின்னர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

குழந்தைக்கான மருந்துகளை எடுத்துக் கொண்டு கடற்படைச் சிப்பாயின் தந்தையும், சகோதரரும் கடற்படைச் சிப்பாயின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். அப்போது கொரோனா தொற்றாளர்களை வீட்டில் மறைத்து வைத்திருக்கின்றனர் என்று கூறிச் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்காணவர்கள் கனேவத்தையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், தாக்குதலை மேற்கொண்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தாக்குதலுக்கு இலக்கானவர்கள் தற்போது வாரியபொல மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். (எ)

# வணிக நிவாரண காலம் நீடிப்பு

கொழும்பு, மே 2

கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக பல்வேறு தரப்பினரின் இன்னல்களைக் கருத்தில் கொண்டு, வணிக மற்றும் தனி நபர்களின் நிவாரணத்துக்காக வழங்கப்பட்டிருந்த காலத்தை நீடிக்க இலங்கை மத்திய வங்கி முடிவு செய்துள்ளது.

அத்தகைய தனி நபர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் கடன் நிவாரணம் மற்றும் மூலதனக் கடன்களுக்கு 4 சதவீத வருடாந்த வட்டி விகிதத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான காலவரையறை ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. அதை நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று அந்தக் காலத்தைக் கடந்துள்ள 5 இலட்சத்துக்குக் குறைந்த அளவிலான காசோலைகள் அனைத்தும் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கவும் இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. (க)

# சட்டவிரோத செயற்பாடு; திருமலையில் 31 பேர் கைது

திருகோணமலை, மே 2

திருகோணமலை கந்தளாய் வன ஜீவராசி பாதுகாப்பு பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 31 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு சட்டவிரோத துப்பாக்கிகள், தேன் போத்தல்கள், மரை இறைச்சி, கத்தி, மண் வெட்டி போன்ற பொருள்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-40)

# சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், மே 2

"வீடுகளுக்குள் பாதுகாப்பாக இருத்தல்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்படும் சிறுவர்களுக்கான சித்திரப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு ஐரோப்பிய ஒன்றியம் அழைப்புவிடுத்துள்ளது.

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஒட்டுமொத்த நாடும் முடக்கப்பட்டு, மக்கள் தத்தமது வீடுகளுக்குள்ளேயே இருக்கவேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது.

வீடுகளுக்குள் பாதுகாப்பாக இருப்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு 15 வயது மற்றும் அதற்குக் குறைந்த வயதுடைய சிறார்கள் தமது சித்திரங்களை அனுப்பிவைக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. இந்த சித்திரப் போட்டியில் இலங்கை மற்றும் மாலைதீவைச் சேர்ந்த இளம் சித்திரக் கலைஞர்கள் கலந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது சித்திரத்தைப் புகைப்படம் பிடித்து, பெயர், வயது மற்றும் தொடர்புகொள்ளக்கூடிய விவரங்களுடன் euinsrilanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். (சித்திரம் உயர்ந்தபட்சம் 25 MB அளவில் மாத்திரமே இருக்கவேண்டும்). சித்திரப்போட்டியின் வெற்றியாளர்கள் 6 வயது வரையானோர் 7 11 வயது வரையானோர், 12 15 வயது வரையானோர் என்ற வயது அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரை ஏக்கரில் கஞ்சா செய்கை

## இருவர் கைது

கொழும்பு, மே 2

எம்பிலிபிடிய கிரிவிலயாயப் பிரதேசத்தில் அரை ஏக்கர் நிலத்தில் கஞ்சா செடிகளைப் பயிரிட்டு பராமரித்து வந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கஞ்சா செடிகள் அனைத்தையும் அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பயிரிடப்பட்டிருந்த கஞ்சாவின் பெறுமதி சுமார் 50 இலட்சம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எம்பிலிபிடிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க)

# ஊரடங்கு அனுமதிப்பத்திரத்தை வைத்து குடு கடத்தியவர் கைது

புத்தளம், மே 2

ஊரடங்குச்சட்டத்தில் பயணிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்துக் கொண்டு, குடு விற்பனையில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ஒருவரை பாலாவி விமானப்படை முகாமின் விமானப்படையினர் இன்று கைதுசெய்தனர்.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் நுரைச்சோலையிலிருந்து கொழும்பு, தம்புள்ளைக்கு மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டுள்ள அவர், அதனை வைத்து குடு விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று தெரியவருகிறது.

விமானப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, புத்தளம் மதுரன்குளிய கரக்கட்டிய 16 ஆம் மைல்கல் பகுதியில் வைத்து குறித்த நபர் பயணித்த வாகனத்தை மறித்து சோதனையிட்ட விமானப் படையினர் குடுவுடன் குறித்த நபரை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர் முந்தலம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-114)

# குடத்தனைச் சம்பவம்....

சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில்,

"குடத்தனையில் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகின்றன. பாரதூரமான குற்றங்களைச் செய்தவர்களைக் கூட தாக்குவதற்குப் பொலிஸாருக்கு அனுமதியோ அதிகாரமோ கிடையாது. இவ்வாறான நிலையில் ஊரடங்கின் போது பொலிஸார் வீடு புகுந்து பெண்கள் மீது தாக்குதல் நடத்தியமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத காட்டு மிராண்டித்தனமான செயல். இந்தச் செயலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தேவையான சட்ட உதவியை வழங்கத் தயாராக உள்ளேன். இதனுடன் தொடர்புடைய பொலிஸார் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" - என்றார். (ஓ,5,20)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 02.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.